NSW GOVERNMENT | Education Public Schools






# சாலைப் பாதுகாப்புத் தகவல்கள்

**உங்கள் குழந்தைகள் பள்ளியிலிருந்து போக, வரப் பயணிக்கும்போது அவர்களின் பாதுகாப்புக்கு நீங்கள்தான் பொறுப்பாவீர்கள்.**

# பாதுகாப்பாக நடக்க வேண்டும்

உங்கள் குழந்தைக்குக் குறைந்தது 8 வயது ஆகும்வரையில் – நடைபாதையில் நடக்கும் போதும், கார் நிறுத்துமிடத்திலும் மற்றும் சாலையைக் கடக்கும்போதும் – எப்போதும் அவர்களின் கைகளைப் பிடித்துக் கொள்ளவும்.

உங்கள் குழந்தைகளை 8 முதல் 10 வயது வரை, அவர்கள் போக்குவரத்துக்கு அருகில் இருக்கும் போதும், சாலையைக் கடந்து செல்லும்போதும் மிகவும் கவனமாகக் கண்காணிக்க வேண்டும்.

**10 வயதுக்கு மேற்பட்ட உங்கள் குழந்தைகளை அவர்களாகப் பள்ளிக்கு நடந்து சென்று வர நீங்கள் அனுமதிக்க முடிவெடுத்தால், பயணத்தை ஒன்றாகச் சேர்ந்து திட்டமிடவும். பாதுகாப்பான ஒரு பாதசாரியாக இருக்க பின்வரும் வகைகளில் பயிற்சியளிக்கவும்:**

- நடைபாதையின் இடதுபுறத்தில் செல்லுதல்
- ஊர்திப்பாதைகளில் உள்ளே வரும் மற்றும் வெளியேறும் வாகனங்களைக் கவனித்துச் செல்லுதல்
- கைப்பேசி சாதனங்கள் அல்லது மற்ற நபர்களினால் கவனம் திசை திருப்பப்படாமல் இருத்தல்
- மழைக்காலத்தில் வீட்டுக்குச் செல்ல பாதுகாப்பான, மாற்று வழியைப் பயன்படுத்துதல்
- மற்ற பாதசாரிகளுக்கு மரியாதை தருதல்.

**நில்!** சாலையோரத்திலிருந்து ஒரு அடி பின்னே தள்ளி இரு.
**நோக்கு!** தொடர்ந்து இருபுறமும் நோக்கு.
**கவனி!** நெருங்கிவரும் போக்குவரத்தின் ஒலிகளை.
**யோசி!** இந்த சமயம் கடப்பதற்குப் பாதுகாப்பானதா?

**மேலதிக உதவிக்கு**

பின்வரும் இணையத்திலுள்ள திணைக்களத்தின் சாலைப் பாதுகாப்புக் கல்வித்திட்டத்துக்குச் செல்லவும்: https://education.nsw.gov.au/road-safety-education அல்லது பின்வரும் இணையதளத்துக்குச் செல்லவும் https://education.nsw.gov.au அதன்பின் சாலைப் பாதுகாப்புக் கல்வியைத் தேடவும்.

**பின்வருவனவற்றை உங்கள் குழந்தைகளுக்கு ஊக்குவிக்கவும்:**

- பாதசாரிகள் கடக்குமிடம், போக்குவரத்து விளக்குகள் அல்லது பள்ளிக்கு அருகிலுள்ள கடக்குமிடம் (இருக்கும் பட்சத்தில்) போன்ற சாலையைக் கடப்பதற்குரிய பாதுகாப்பான இடத்தை எப்போதும் பயன்படுத்துதல்
- அவர்கள் சாலை மற்றும் ஊர்திப்பாதைகளைக் கடப்பதற்கு முன்னர் வாகனங்கள் எவையும் திரும்புகின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும்
- ஓட்டுநர் அவர்களைப் பார்த்திருக்கக் கூடும் அல்லது அவர்களுக்காக நிறுத்துவார் என்று எப்போதும் தாமாக அனுமானம் செய்துகொள்ளக் கூடாது
- ஓட்டுநரின் கண்களை நேருக்கு நேர் நோக்க வேண்டும் அதனால் ஓட்டுநர் அவர்களை பார்த்திருக்கிறார் என்பது அவர்களுக்குத் தெரியும்
- சாலை அல்லது ஊர்திப்பாதைகளைக் கடக்குமுன் ஓட்டுநர் தங்களுடைய வாகனத்தை முழுவதுமாக நிறுத்தும்வரை காத்திருக்க வேண்டும்.

